திரு. செ. சிவசாமி: தலைவரிடத்திலே தான் கொடுத்தேன்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி இப்போது என்னிடத்திலே தகவல் இல்லை, சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலே சொன்னதாக சொல்கிறீர்கள். விசாரித்துச் சொல்கிறேன்.

7. அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) மோட்டார் வண்டிகள் மீது வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே, மார்ச் 3ஆம் தேதி பட்ஜெட் என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதற்கு முன்னாலே இப்படி வரி விதிப்பு என்று கொண்டு வருகிறீர்கள். பட்ஜெட்டிலே கொண்டு வருவதை இப்போதே கொண்டு வருகிறீர்கள், இது லீக்கேஜ் ஆகாதா? ஏப்ரல் 78 லிருந்து மார்ச் மாதம் வரையிலே என்று ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்திருக்கிறீர்கள் போன சட்ட மன்றத்திலேயே சொல்லியிருக்கலாம், அந்த பட்ஜெட்டிலே சொல்லாமல் அல்லது சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே சொல்லாமல் இப்போது 1979ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வர இருக்கிறபோது இந்த புதிய வரியை கொண்டு வருகிறீர்கள், இப்படி இடை செருகலாக ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து கொண்டு வருகிறீர்கள், இதனால் பாதிக்கப்படப் போவது தனிப்பட்ட முதலாளிகள் அல்ல, பூராவும் கார்ப்பரேஷன்கள் தான் பாதிக்கப்படுகின்றன. அதன் காரணத்தினால், பொது மக்கள் தான் பாதிக்கப்பட இருக்கிறார்கள். லம்ப் சம்மாக கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள், ஏற்கெனவே அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் போனஸ் இல்லை என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய வரியிலே 68 சதவீதம் ஒரே வாரத்திற்குள்ளாகக் கட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட அதிகமான வரியை பொது மக்களின் மீது தான் போடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட முறையிலே விதிகளுக்குப் புறம்பான முறையிலே கொண்டுவரப்படுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துகொண்டு இந்த மசோதாவின் அறிமுகத்தை எதிர்க்கிறேன் என்பனதத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 24]

[முற்பகல் 11-10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கூற்றிலேயே, இது வருகின்ற ஆண்டுக்கு அல்ல, கடந்த ஆண்டுக்கு என்பது புலனாகிறது. This is a surcharge levied on taxation, which was itself provided for in the last Budget. சென்ற பட்ஜெட்டிலேயே, டவுன் பஸ்களுக்கு 90 ரூபாயிலிருந்து 115 ரூபாயாகவும், மொஃபசல் பஸ்களுக்கு 180 ரூபாயிலிருந்து 195 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதற்குக் கூடுதல் வரியாகத்தான் கடந்த ஆண்டுக்கு இது விதிக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கூடுதல் வரி என்று சொல்கிறார்கள், புதிய வரி விதிப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் வருகிறது. அதனால்தான் சொல்கிறேன்.

THE HON. THIRU C. PONNAIYAN : This is a tax not for the next year but this is a tax for the current year 1978–1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

---

* 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதிய அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.